**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 301/2018

நாள்: 04.08.2025

பெயர்: கண்ணகி (வா.சா.1) க/பெ: குணசேகரன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1. கிருஷ்ணன் மகன் சாக்ரடிஸ் எனது தம்பி. நான் எனது தம்பியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். என்னுடைய தம்பி சாக்ரடிஸ் 1ம் பிரதிவாதி மோகனுடைய தாய் மாமனுடைய பேரன் என்றால் சரிதான். சர்வே நம்பர் எனக்கு தெரியாது எனக்கு எழுத படிக்க தெரியாது. இது எங்களுடைய இடம் அவ்வளவுதான் எனக்கு தெரியும். கையெழுத்து போட மட்டும் கற்றுக்கொண்டேன். எனக்கும் எனது தம்பிக்கும் பிரச்சனை ஏதும் இல்லை. பேச்சு வார்த்தையில் உள்ளோம். எந்த ஆவணத்தின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வா.சா.ஆ.2 எனது தம்பி எனக்கு கொடுத்த பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2.எனது தம்பிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது அவருடைய மாமனாரின் சொத்து. எழுதிக்கொடுத்தது தம்பியின் மனைவி சாந்தியாகும். வா.சா.ஆ2 ல் 2ம் பக்கத்தில் உள்ளவாறு 03.02.2012 ம் தேதியில் தானா செட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு அது குறித்து விவரம் தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை எனது வழக்கறிஞரிடம் தான் கேட்கனும். வா.சா.ஆ2 தானா செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு தாய் பத்திரம் 03.02.2012 தேதியிட்ட தானாசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான்.

3.வா.சா.ஆ.2க்குரிய தாய் பத்திரமான 03.02.2012தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதாவது உண்டா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. தாவா சொத்து கரடிகுளம் கிராமத்திலிருந்து

ஜெயங்கொண்டம் போகும் வழியில் சோழியன் தெருவில் உள்ளது என்றால் சரிதான். தற்போது தாவா சொத்தில் 12 அடி உயரம் ஆரஸ்பதி மரங்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்கில் சாந்தி, கிழக்கு முத்து, தெற்கில் பாலசுப்பிரமணியன் நிலமும் வடக்கில் ரோடும் உள்ளது.

4.தாவா சொத்தில் மேற்கே உள்ள சாந்திக்கு உள்ளதாக உள்ள சொத்து பூர்வீகபடி பாத்தியப்பட்டதா அல்லது பத்திரபடி பாத்தியப்பட்டதா என்றால் பூர்வீகபடி பாத்தியப்பட்டது. அதற்கு பத்திரம் இல்லை. வா.சா.ஆ2 பத்திரத்திற்கு தாய் பத்திரமான 03.02.2012 தேதியிட்ட பத்திரத்தை பார்த்தால் மேற்புற சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிய வரும் என்றால் பார்த்தால் தெரியும். என்னுடைய தம்பி இதே சொத்திற்கு அசல் வழக்கு எண் 88/2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்88/2012 வழக்கை 12.07.2018ல் எனது தம்பிற்கு எதிராக உத்தரவாகி உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

5.அசல் வழக்கு எண்88/2012 நிலுவையில் இருந்தபோதுதான் என் தம்பி கடந்த 17.05.2018 அன்று வா.சா.ஆ.2 ஆவணத்தை எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். எனது தம்பியின் மனைவி சாந்தி ஊனமுற்றவர் . அதனால் அவரது குடும்பத்தை நான்தான் பார்த்து வந்தேன். அதனால் அவர்கள் எனக்கு 3லட்சம் கொடுக்கவேண்டி இருந்தது. அதனால் அவரது தாவா சொத்தை எனக்கு எழுதிக்கொடுத்தார். என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ2 ஆவணம் எனது தம்பி கடனுக்காக எழுதி கொடுத்தது என்றால் சரிதான். எனது தம்பி, தம்பி மனைவியும் என்னிம் வாங்கிய கடனை திருப்பி தரமுடியாத காரணத்தினால் இந்த வா.சா.ஆ.2 எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான்.

6.இந்த செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததற்கு வேறு எந்த விதமான காரணமும் இல்லை. நான் கூலி வேலை செய்வதால் எனக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.2 எழுதிக்கொடுத்தது என்றால் தவறு. என் தம்பி மனைவி சாந்தி தலைமையாசிரியராக பணியாற்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தம்பி சாக்ரடிஸ் இந்திய அஞ்சல்துறையில் வேலை செய்கிறார்.

அவர் போஸ்ட்மாஸ்ட்டாரா அல்லது போஸ்ட்மேனா என்று எனக்கு தெரியாது. என் தம்பி முன்பு தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண் 88/2012 வழக்கு 03.02.2012 தேதியிட்ட பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

7.இந்த வழக்கை குறித்தோ அ.வ.88/2012 குறித்தும், 03.02.2012 தேதியிட்ட பத்திரத்தை குறித்தும், இந்த வழக்கின் வா.சா.ஆ.2 எழுதிக்கொடுத்ததை பொறுத்தும் என் தம்பி நேரடியாக சம்மந்தப்பட்டு இருப்பதால் அவரை விசாரித்தால் விவரம் தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையிலிருக்கும் போது என் பெயரில் தாவா சொத்து குறித்து என் தம்பி என் பெயரில் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ2 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அ.வ.88/2012 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு என் தம்பியை கட்டுப்படுத்துவதுபோல் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது தம்பி மேல்முறையீடு செய்தாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சியபனையுடன் இந்த கேள்வி கேட்கப்பட்டது.

8.வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்த தம்பியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கபோகிறேனா என்றால் அது குறித்து எனது வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். தாவா சொத்தில் கீழ்புறம் முத்து என்பவர் நிலம் உள்ளது. தாவா சொத்தின் கீழ்புறம் மற்றும் மேல்புறம் சர்வே நம்பர் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்து பொறுத்து ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் ஏற்படுத்தியதற்காக என் தம்பி மீதும் என் தம்பி மனைவி மீதும் ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1ல் சிசி 236/2023 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.88/2012 வழக்கு நடத்தினால் என் தம்பி செய்த மோசடி தெரிய வரும் என்பதால் அந்த வழக்கை கைவிட்டு அந்த சொத்தை என்பெயரில் எழுதி வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையத்திற்கு வாங்கி உள்ளேன். சொத்து விவரத்தை

தவறாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஒரு சொத்து வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து வாங்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த சொத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. சர்வேயர் வைத்து நிலத்தை அளந்து பார்த்து நிலம் வாங்கினேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்குரிய தாய் பத்திரம் என் தம்பி என்னிடம் கொடுக்கவில்லை. அவரே வைத்துக்கொண்டார். தாவா சொத்திற்கு பட்டா மாற்ற மனு அளித்தது யார் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ல் பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் உள்ள பட்டா எண் 2598 குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய இரண்டும் ஒரே சர்வே எண்ணிற்கு உரியதா அல்லது வெவ்வேறு சர்வே நம்பருக்குரியதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9.வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒரே சர்வே எண்ணிற்கு இரண்டு பட்டா கொடுக்கும் வழக்கம் இல்லை என்றாலும் நான் மோசடியான முறையில் ஒரே சர்வே எண்ணிற்கு 2 பட்டாகனை ஜோடித்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 வழக்கிற்கு தொடர்புடையது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 வழக்கு சொத்திற்கு செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 பட்டாவை ஏன் தாக்கல் செய்தேன் என்று எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கு சொத்து குறித்து வில்லங்கம் பார்க்கவில்லை. தாவா சொத்திற்கு 22.12.2009ல் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி தாவா சொத்தை எழுதிக்கொடுத்து அது நிலுவையில் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தின் கீழ்புறமோ மேல்புறமோ எனது தம்பிக்கோ எனது தம்பி மனையிக்கோ சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் 22.12.2009ல் இருக்கும் கிரைய பத்திரம் பொறுத்து நான் பரிகாரம் கோரவில்லை என்றால் எனக்கு தெரியாது.

பத்திரத்திற்கு விரோதமாக பரப்பளவு தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 தானாசெட்டில்மெண்ட் மாதிரியும் கிரைய ஆவணமாக தோரணையில் இருப்பதால் இது செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை எனது அனுபவித்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஆரஸ்பதி மரங்கள் நடப்பட்டுள்ளது அது குறித்து எனது வாதுரையில் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை. 22.12.2009ல் கிரைய பத்திரம் படி 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பது சட்டப்படி செல்லத்தக்கது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்தில் உரிமை மற்றும் அனுபவம் இல்லாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் சொத்தின் கீழ்புற சொத்திற்கு எனது தம்பி வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.

ஒப்பம்/– திருமதி.S.தனலெட்சுமி, B.A., M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.